**களனி ஆற்றிற்கு மேலாக புதிய பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டம் - 2020**

களனி ஆற்றிற்கு மேலாக புதிய பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. கொழும்பு நகரத்தில் போக்குவரத்து வலையமைப்பை மேம்படுத்தி, பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுவதற்குப் பங்களிப்பதற்காக களனி ஆற்றின் குறுக்கே ஒரு புதிய பாலத்தை உயர் இயக்க இணைப்பாக நிர்மாணிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலைத் தணித்தல் மற்றும் நீக்குதல் இச்செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டமானது உருக்கு பாலப் (steel Bridge) பிரிவு மற்றும் மேலதிக வடிவமைக்கப்பட்ட (Extra dosed) பிரிவு என இரண்டு ஒப்பந்த பொதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 55,313 மில்லியனுக்குச் சமமான யப்பான் யென் 41,429 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 46,755 மில்லியனுக்குச் சமமான யப்பான் யென் 35,020 மில்லியன் தொகை யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 8,558 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டத்தின் இரண்டு பொதிகளும் அதன் செயற்பாடுகளினை 2014 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் முறையே 2021 மார்ச் 27 மற்றும் 2021 மார்ச் 28 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தன.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீகச் செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | நடவடிக்கை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது<br>எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் | <br>அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | கணக்காய்வு விடயம் | தாக்கம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | சதவீதம் | சதவீதம் | | | |
| பொதி II | மேலதிக வடிவமைக்கப்பட்ட பாலப் பிரிவு | 94 | 84 | செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைந்துகொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலில் இருந்து 10 சதவீதத்தால் விலகியிருந்தது. | தொடர்பு கிரயம் அதிகமாக ஏற்படலாம். | 2020 மார்ச் முதல் நிலவிய கொவிட் - 19 தொற்றுநோயின் விளைவாகும். |

### 2.2 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான GOSL நிதி மற்றும் வெளிநாட்டு கடனின் தேறிய நிதியேற்பாடு மற்றும் தேறிய செலவினம் முறையே ரூபா 15,667 மில்லியன் மற்றும் ரூபா 15,414 மில்லியன் ஆக காணப்பட்டன. | நிதிகள் குறைவாகப் பயன்படுத்தப்படுதல். | மொத்த ஒதுக்கீட்டில் 98.4 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் மொத்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 2.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 ஏப்ரல் 30 இற்குப் பின்னரும் கால நீட்டிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்தம் தொடரப்படுவது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தங்களின் செயலாற்றல் மற்றும் பின்பற்ற வேண்டிய சரியான ஒப்பந்த நடைமுறைகள். | ஒப்பந்தத்திற்கு பொறியியலாளரால் வழங்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில், இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பிலும் பூர்த்தி செய்யப்படுவதற்கான கால நீடிப்புக்கள் (EOT) காலத்திற்கு காலம் வழங்கப்படுகின்றன. | ஒப்பந்த ஆவணத்தின் பிரகாரம் சட்டபூர்வ கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முன்னர் தேவைப்படும் நேரத்திற்குள் EOT அங்கீகரிக்கப்பட வேண்டும். |

### 2.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக ஹல்பரவவில் உள்ள இலங்கை அணுசக்தி சபையின் நிர்மாணப் பணிகள் 2015 யூன் 17 முதல் நிறுத்தப்பட்டு, NAITA இற்கு புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக இந்த இடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பிரகாரம், மேற்கொள்ளப்பட்ட பணிக்கான ரூபா 34 மில்லியன் தொகையான கிரயம் கணக்காய்வில் சிக்கனமற்ற செலவினங்களாக அவதானிக்கப்பட்டது. | ரூபா 34 மில்லியன் கிரயமானது சிக்கனமற்ற செலவீனமாக கருதப்பட்டிருந்தது. | ரூபா 34 மில்லியன் தொகையானது ஹல்பரவ தளத்தில் மேற்கொள்ளப்பட்ட கொங்கிறீட் அத்திவாரங்கள் போன்ற நிரந்தர வேலைகளின் பெறுமதியாகும். நிரந்தரப் பணிகளுடன் கூடிய இக் காணி NAITA இடம் அவர்களின் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டது. எனவே ஏற்பட்ட செலவினத்தை சிக்கனமற்ற செலவினமாகக் கருத முடியாது. | இந்த மீதி PMU இன் புத்தகங்களில் தனியாக வைத்திருக்கப்பட வேண்டும், பின்னர் செயற்திட்டத்திலிருந்து மாற்றப்பட்ட அதன் சொத்து பெறுமதியிலிருந்து இத் தொகையை பதிவழிப்பதற்கு RDA நடவடிக்கை எடுக்க வேண்டும். |